<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**</u>

<u>**SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

<u>**Case No. C.C. No.217/2020**</u>

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-2, L.W- 2 |
| Name | : Kannadhasan | Defence | : |
| Father Name | : Gunasekaran | Court | : |
| Village | :Periya Street, Kodaikaramullai | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 24/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 26.08.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து தேர்வுக்காக படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் அ.சா.1 யை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை சுமார் 7 மணியளவில் நான் கல்லூரி முடித்து விட்டு வீட்டிற்கு வந்தபோது அ.சா. 1 உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. நான் அவரிடம் எதுவும் கேட்காமல் எனது இருச்சக்கர வாகனத்தில் அவரை சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தேன். அ.சா.1 க்கு யாரால் எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 , எதிரிகள் மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒரே தெருவில் வசிக்கிறோம் என்றால் சரிதான். அ.சா.1 யை நான் பார்த்தபோது அவருக்கு தலையின் வலது பக்கத்திலும் , வலது கையிலும் காயம்ஏற்பட்டதால் வலது பக்கமாக இரத்தம் வழிந்தது என்றால் சரிதான். காயம்பட்ட அ.சா. 1 அவரது வீட்டில் அவரது அண்ணன் மகளுடன் நின்றுக்கொண்டிருந்தார். ஊர்க்காரர்கள் கூட்டமாக இருந்ததால் நான் அங்கு சென்று பார்த்தேன். நான் அ.சா.1 யை சீர்காழீ அரசு மருத்துவமனைக்கு

04.06.2019 அன்று இரவு 10.30 மணிக்கு சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் தகவல் எதுவும் சொல்லவில்லை. வழக்கு சம்பந்தமாக புதுப்பட்டிணம் போலிசார் 1-வது எதிரியை 17.06.2019 அன்று 16.30 மணிக்கு பன்னீர்க்கோட்டகம் செக் போஸ்ட் பஸ்ஸ்டாப் அருகே கைது செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2-வது எதிரி நாகப்பட்டிணம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2. 04.06.2019-ம்தேதி இரவு 8.30 மணிக்கு அ.சா1 அவரது வீட்டிற்கு பக்கத்தில் போட்டிருந்த வைக்கோலை மாடுகள் மேய்ந்ததால் அதை விரட்டிக்கொண்டு அ.சா.1 வீட்டின் வழியாக வயல் பக்கம் சென்றார் என்றால் சரியல்ல.. பின்பு மாடுகளை ஓட்டிவிட்டு திரும்ப வீட்டீற்கு வந்தபோது அ.சா. 1 வீட்டிற்கு பக்கத்தில் உள்ள குளத்தின் அருகே உள்ள வயல் அருகே வந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் யார் எனது கொல்லை வழியாக மாடுகளை விரட்டி சென்றது என்று கேட்டு 1-வது எதிரி அ.சா.1ன் முகத்தில் டார்ச் லைட்டை அடித்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேலும் 1-வது எதிரி அ.சா.1யை குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக திட்டி 1-வது எதிரி அவரது மகனான 2-வது எதிரியிடம் அவனை அடிடா என்று கூறினார் என்றால் சரியல்ல. உடனே 2-வது எதிரி இரும்பு கம்பியால் அ.சா.1ன் வலது பக்க கையில் அடித்தார் என்றால் சரியல்ல்..

3. சாட்சி நீதிமன்றத்தில் தனது வலது கையில் பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டதையும் காயத்தழும்பையும் காட்டினார் என்றால் அதுப்பற்றி தெரியாது. அ.சா.1 தன்னை தற்காத்துக்கொள்ள தடுத்தபோது ராஜேந்திரன்அ.சா.1ன் தலையில் கம்பியால் வலது பக்கமாக அடித்தார் என்றால் சரியல்ல. அதில் அ.சா.1க்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு அவர் தலையில் தையல் போட்டுள்ளார் என்றால் தெரியாது. அதன் பிறகு அ.சா. 1 சத்தம் போடவே ஊரில் உள்ளவர்கள் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள் என்றால் சரியல்ல. சீர்காழி அரசு மருத்துவமனையில் அ.சா.1 25.06.2019 ம் தேதி வரை சிகிச்சையில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை.